தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 17, திருவள்ளுவர் ஆண்டு–2054

2023 மார்ச் 31, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை."

கல்வி ஒன்றே அழிவற்ற செல்வமாகும். அதற்கொப்பான சிறந்த செல்வம் வேறு எதுவும் இல்லை.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 81, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

81—

காவிரி குடிநீர்

***13771—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, விராலிமலை நகரப் பகுதிக்குக் கூடுதலாக காவிரி குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கின்றேன்.

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை ஒன்றியம், விராலிமலை ஊராட்சி, 14 குடியிருப்புகளைக் கொண்டு வளர்ந்துவரும் ஊராட்சியாகும். இவ்வூராட்சியின் தற்போதைய மக்கள்தொகை 20,125 ஆகும். மேற்படி ஊராட்சிக்குத் தேவைப்படும் குடிநீர் நாளொன்றுக்கு, நபர் ஒருவருக்கு 55 லிட்டர் வீதம் 11.70 இலட்சம் லிட்டர் ஆகும். இக்குடியிருப்புகளுக்கு, 1,766 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்மூலம் 72,000 லிட்டர் குடிநீரும், இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் 65,000 லிட்டர் குடிநீரும், புதுக்கோட்டை நகராட்சி, 3 பேரூராட்சிகள் மற்றும் 15 வழியோர ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் 6.58 இலட்சம் லிட்டர் குடிநீரும், ஆக மொத்தம் 7.95 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மீதம் தேவைப்படும் குடிநீர் உள்ளூர் நீராதாரங்களைக் கொண்டு வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகப் பொதுச் செயலாளர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு என்னுடைய வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபொழுது பிற ஆதாரங்கள்மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது என்று சொன்னார்கள். விராலிமலை என்பது உங்களுக்குத் தெரியும். பிரசித்திபெற்ற கோவில் நகரம் மட்டுமல்ல, வளர்ந்துவரக்கூடிய தொழில் நகரம். பொதுவாக, 3,20,000 லிட்டர் குடிதண்ணீர் நாளொன்றுக்கு அங்கு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இப்போது, திருச்சியில் பேருந்து நிலையம் கட்டப்பட்டு திருச்சி, விராலிமலை எல்லாம் ஒன்றாக இருக்கக்கூடிய அளவிற்கு மிகப் பெரிய தொழில் நகரமாக வளர்ந்து கொண்டிருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். ஆகையினால், இப்போது வழங்கிக் கொண்டிருக்கக்கூடிய குடிதண்ணீர் அங்கே முற்றிலுமாகப் போதவில்லை. அங்கே பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகின்றார்கள். நாளொன்றுக்கு 8 இலட்சம் லிட்டர் குடிதண்ணீர் விராலிமலைக்கு மட்டும் தேவைப்படுகிறது.

2023 மார்ச் 31]

அதைத் தொடர்ந்து இலுப்பூர் பேரூராட்சி மற்றும் அன்னவாசல் பேரூராட்சிகளில் குடிதண்ணீர் பிரச்சினை இருக்கிறது. இன்றைக்கு 1,65,000 மக்கள்தொகை இருக்கிற புதுக்கோட்டை நகராட்சியிலே, பத்து நாட்களுக்கு ஒருமுறைதான் குடிதண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. ஆக, இவை எல்லாவற்றுக்கும் சேர்த்துத்தான் நான் பேசுகின்றேன். ஆகையினால் குடிநீர் என்பது நம்முடைய ஆதாரம், அவசியம். கூடுதலாக வழங்குவதற்கு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக தாங்கள் ஆவன செய்ய வேண்டும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு குடிநீர்த் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 20, 25 ஆண்டுகளான காரணத்தால் போடப்பட்டிருக்கிற* pipelines *பல இடங்களிலே சேதமடைந்திருக்கின்றன. ஏற்கெனவே ஒருமுறை இந்தக் கேள்வியை நீங்கள் கேட்ட பிறகு, நமது குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளை அனுப்பி அந்த* pipelines *எல்லாம் சரிசெய்யப்பட்டன. கொஞ்சம் கூடுதலாகத் தண்ணீர் கொடுப்பதற்குரிய ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. விராலிமலை மற்றும் இருக்கிற பகுதிகளுக்கும், கூடுதலாகக் குடிநீர் வழங்க, கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்றை புதியதாக உருவாக்க வேண்டுமென்று 547 கோடி ரூபாய் செலவிலே ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. தகுந்த நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்காகக் காத்திருக்கிறோம். அதற்கிடையிலே, அது வருவதற்குத் தாமதமாகுமென்ற காரணத்தால் இப்போது 76 கோடி ரூபாய் செலவிலே இருக்கிற குடிநீர்த் திட்டத்தைச் சரிசெய்து, முழுமையாகத் தண்ணீர் கொடுப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதை நான் நன்றாக அறிவேன். அந்தப் பகுதியையும் நான் நன்றாக அறிவேன். எவ்வளவு விரைவாக அதைச் செய்து தர முடியுமோ, அவ்வளவு விரைவாகச் செய்து தருவதற்கு அனைத்து முயற்சிகளையும் எடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.*

[2023 மார்ச் 31

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடுதலாகக் குடிநீர் வழங்க, ஏற்கெனவே DPR தயாரிக்கப்பட்டு வருவதை நான் நன்கு அறிவேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும், அந்தப் பதிலை சொல்லியிருக்கிறார்கள். அதை விரைவுபடுத்தி Administrative Sanction வழங்கி, திட்டம் வருகின்றபொழுதுதான் பொதுவாக அந்த வழியோர கிராமங்களில் உள்ள 15 ஊரகக் குடியிருப்புப் பகுதிகளுக்கும் நாம் குடிதண்ணீர் வழங்க முடியும். ஏனென்று சொன்னால், தாங்கள் சொன்னதுபோல, 1995–ல் ஆரம்பிக்கப்பட்ட திட்டம். இப்போது 28 ஆண்டுகள் முடிந்திருக்கின்ற நிலை. ஆகையினால் கூடுதலான குடிநீர் வழங்க, விராலிமலை, அன்னவாசல், இலுப்பூர் மற்றும் புதுக்கோட்டைக்கும் சேர்த்து ஒட்டுமொத்தமாக நீர் ஆதாரங்களைத் திரட்டி குடிநீர்த் தேவையை நிறைவேற்ற வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை மீண்டும் வலியுறுத்தி அமர்கின்றேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்துபேசி, எவ்வளவு விரைவாக அதைச் செய்து முடிக்க முடியும் என்பதை அறிந்து நாங்கள் செய்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன் அவர்கள்.

திரு. க. கார்த்திகேயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி நகராட்சி, 80,000 மக்கள்தொகை கொண்ட ஒரு பெரிய நகராட்சியாகும். இந்த நகராட்சியையொட்டி பள்ளி மற்றும் கல்லூரிகள் எல்லாம் இருக்கின்ற காரணத்தினால், மிகுந்த போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. அங்கேயுள்ள பேருந்து நிலையத்திற்கு வரவேண்டுமென்றால், போக்குவரத்து நெரிசலால், சற்றேறத்தாழ அரை மணிநேரத்திற்கும் மேலாக இடையூறுகள் ஏற்படுகின்றன. ஆகவே, கள்ளக்குறிச்சி நகராட்சிக்குப் புதிய புறநகர் பேருந்து நிலையம் அமைத்துத்தர அரசு முன்வர

2023 மார்ச் 31]

வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புறநகர் பேருந்து நிலையம் அமைத்துக் கொடுப்பதற்கு, அரசுக்குத் தேவையான நிலத்தை தானமாகக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேருந்து நிலையம் அமைத்துத் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாத கேள்வியைக் கேட்டிருக்கிறீர்கள். அவர் குடிநீர் வசதி தொடர்பாகக் கேட்கிறார். நீங்கள் பேருந்து நிலையம் அமைத்துத் தர கேட்கிறீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ் அவர்கள்.

திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டம், நன்னிலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நன்னிலம் பேரூராட்சி, வலங்கைமான் பேரூராட்சி, குடவாசல் பேரூராட்சி ஆகிய பேரூராட்சிகளில் உள்ள அனைத்து வீடுகளுக்குமான குடிநீர் இணைப்பு வழங்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு நகரமும், ஒவ்வொரு பேரூராட்சியும், தினந்தோறும் வளர்ந்து கொண்டு வருகின்ற நகரமாக, பேரூராட்சியாக இருக்கின்றது. அப்படி வருகிறபோது, ஏற்கெனவே வழங்கப்பட்ட குடிநீரின் அளவு சற்று குறைவாக இருக்கிறது. ஆனால், நகரத்தை விட்டு, பேரூராட்சியை விட்டு, ஒரு கிலோ மீட்டர், இரண்டு கிலோ மீட்டர் தள்ளி, திடீரென்று ஒரு வீட்டைக் கட்டிக் கொண்டு, அந்தப் பகுதியிலே சாலை வசதி, குடிநீர் வசதி மற்றும் தெரு விளக்கு வசதி தேவையென்று சொல்கின்றார்கள். எனவே, ஒவ்வோர் இடத்தையும் பார்வையிட்டு, எந்த இடத்திற்கு அவசியம் தேவைப்படுகிறதோ, அந்த இடத்திற்கு உடனடியாக அடிப்படை வசதிகள் செய்து தருவதற்கு துறை தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ் அவர்கள் சொல்வது, என்னுடைய கவனத்திற்கு வரவில்லை. அதுகுறித்து, கேட்டு தெரிந்து, உங்களுக்கு விவரம் தெரிவிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.

திரு. மு.பெ. கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தனூர் அணையிலிருந்து செங்கம் பேரூராட்சிக்கும், புதுப்பாளையம் பேரூராட்சிக்கும் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் குடிநீர் வழங்கப்பட்டது. இப்போது புதுப்பாளையம் பேரூராட்சிக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் குடிநீருக்காக 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி தந்திருக்கிறார்கள். அதற்கு எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், செங்கத்திலிருந்துதான் தண்ணீர் செல்கிறது. செங்கம் பேரூராட்சி, திருவண்ணாமலை மாவட்டத்திலேயே பெரிய பேரூராட்சி. அங்கே போதுமான அளவிற்கு குடிநீர் விநியோகம் செய்வதற்கு, கூடுதலாக திறனை உயர்த்தித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதோடு, செங்கம் பேரூராட்சியை நகராட்சியாகத் தரமுயர்த்தித் தருவார்களா என்பதையும் கேட்டு, திருவண்ணாமலையை மாநகராட்சியாக அறிவித்ததற்கும் நன்றியைத் தெரிவித்து விடைபெறுகின்றேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இரண்டுவழிச் சாலையை அகலப்படுத்திய காரணத்தினால், திருவண்ணாமலைக்கு வருகின்ற குடிநீர்க் குழாய்களில் பழுது ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் அதைச் சரி செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இதற்கிடையில் நம்முடைய உறுப்பினர் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். வேலூரில் ஒரு பகுதி மற்றும் திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களுக்கு காவேரியிலிருந்து ஒரு புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் தீட்டப்பட்டு, நிதியாதாரத்திற்காக தாமதப்பட்டு வருகிறது. எனவே, அந்த நிதியாதாரம் வந்தால் திருவண்ணாமலை மாவட்டம், கள்ளக்குறிச்சி மாவட்டம் மற்றும் வேலூரில் ஒரு பகுதிக்கு முழுமையாகத் தண்ணீர் கிடைக்கும்; அதற்கிடையில் குழாய்கள் பாதிக்கப்பட்டிருக்குமானால், அதைக் கவனித்து உடனடியாகச் சரி செய்வதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2023 மார்ச் 31]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி அவர்கள்.*

திரு. எம்.ஆர். காந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவில் மாநகராட்சிப் பகுதியிலுள்ள வலம்புரிவிளையில் மலைபோல் குவிந்திருக்கும் குப்பைகளை அகற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், குடிநீர் சம்பந்தப்பட்ட கேள்விதான் மூலக் கேள்விக்குத் தொடர்புடையது. நீங்கள், இன்னொரு நாள் கேளுங்கள்.*

திரு. எம்.ஆர். காந்தி: *சரி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 82, மாண்புமிகு உறுப்பினர் திரு. நிவேதா எம். முருகன், மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

82—

வேளாண்மைக் கல்லூரி

***6893—திரு. நிவேதா எம். முருகன்:**

மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதியில் புதிய வேளாண்மைக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பூம்புகார் தொகுதியில் புதிய வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நிவேதா எம். முருகன் அவர்கள்.*